2004 பிப்ரவரி 13] [திரு. எம். ராதாகிருஷ்ணன்]

1-2-2004-இன்மூலம், சென்னை சிறப்பு வருவாய் நிர்வாக ஆணையருக்குப் பரிந்துரை செய்துள்ளார். அம்மா அவர்களுடைய அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும். மீன் துறை மூலமாக வழங்கப்படும் நிவாரணத்தைப் பொறுத்தவரையில், காணாமல் போன 4 மீனவர்களில், 3 மீனவர் குடும்பங்களுக்கு தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம், புதுடில்லி மூலம் வழங்கப்படவுள்ள தலா ரூபாய் 50 ஆயிரத்தைப் பெற்றுத்தர தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ததேயூஸ் என்பவர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இல்லாததால், தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் நிதியுதவியைப் பெறத் தகுதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று ஆறு முதல் இருநூற்று நான்கு வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்திரண்டு மற்றும் நூற்று நாற்பத்து மூன்று ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம்.

[2004 பிப்ரவரி 13

திரு. லா. சந்தானம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.